1990 ஏப்ரல் 3]

இருபது பேர் அரசுக்கு விண்ணப்பத்தை அனுப்பினால் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய நில வசதி, போக்குவரத்து இணைப்பு, தண்ணீர் வசதி, மின்சார வசதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தொழில் பேட்டைகளை அமைத்து தருவதற்கு இந்த அரசு முன் வரும்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதுகுளத்தூர் பகுதியில் தமிழ்நாடு மெக்னீஷியம் பிளான்ட், கார்ப்பரேஷனுக்கு சம்பந்தப்பட்ட உப்பு தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகளை எல்லாம்ஆரம்பிக்கப் பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் அதற்கு உபதொழிலாக முதுகுளத்தூர் பகுதியிலே ஒரு சிறு தொழில்பேட்டையை உருவாக்கினால் அதிகமான பேர் தொழில் செய்வதற்கு, முனைவதற்குத் தயாராக இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்த வசதிகளெல்லாம் இப்பொழுது அங்கே இருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட மனுக்கள் நிச்சயமாக அரசுக்கு அனுப்பப்படும். நடப்பாண்டிலேயே அந்தச் சிறு தொழிற்பேட்டையை அங்கே உருவாக்குவதற்கு அரசு அனுமதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசுக்கு வரப் பெறுகின்ற விண்ணப்பங்களை அடிப்படையாக வைத்து உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பட்டுப்பூச்சி வளர்ப்பு.

*7005 திரு. கே. ரமணி :

மாண்புமிகு சமூக மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தாலுக்கா, மலைப்பகுதியான குத்தியாலத்தூர், குன்றி, கூத்தம்பாளையம் கேர்மாளம், திங்களூர் ஊராட்சிகளில் பட்டுப்பூச்சி வளர்ப்புக்கான முசுக்கொட்டைச் செடியை 'ஊசி ஈக்கள்' தாக்குவது குறித்து அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அந்த ஊர்களிலேயே பட்டுப்பூச்சி வளர்க்க விவசாயி களுக்கு பயிற்சியளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) : ஊசி ஈ என்பது பூச்சி இனத்தைச் சார்ந்தது ஆகும். இந்த ஊசி ஈ பட்டுப்புழுவின் மீது முட்டையிட்டு கூடு கட்டும் தருவாயில் புழு இறந்து விடுகிறது. எனவே, ஊசி ஈ தாக்குதலுக்கு முன் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள இயலுமே ஒழிய நோய் தாக்கப்பட்ட பூச்சிகளைக் காப்பது என்பது இயலாத காரியம். எனவேதான் சத்தியமங்கலம் பகுதிகளில் பட்டு வளர்ச்சியில் ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகளுக்குத் தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

திரு. கே. ரமணி : தலைவரவர்களே, சத்தியமங்கலம் தாலூக்காவிலே நான் கேட்டிருக்கின்ற இந்தக் கேள்வி சம்பந்தப்பட்ட ஊர்கள் அத்தனையும் அந்த மலைப்பகுதியிலே இருக்கும்படியான ஊர்கள். அங்கே இந்தத் தொழிலைச் செய்வதற்கு அனுபவம் இல்லாது மலையிலே வாழக் கூடியவர்கள் சாதாரணமானவர்களாகவும் ஏழை மக்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் ஏதோ கொஞ்சம் கையில் இருக்கின்ற காசைச் செலவழித்து இந்த வேலைகளை ஆரம்பிக்கும்பொழுது இந்த ஊசி ஈக்களினுடைய தாக்குதல் கடுமையாகி அவர்களுக்குப் பெரு நஷ்டம் ஏற்பட்டு இந்தத் தொழிலை நடத்த முடியாமல் இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு அங்கேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகளையோ அல்லது மற்ற ஊழியர்களையோ அனுப்பி அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர்வரகளே, இப்பகுதியிலுள்ள முன்னோடி விவசாயிகளுக்குக் கோர்மாளத்திலுள்ள அரசு பட்டுப் பண்ணையில் இத்துறையின் தொழில்நுட்ப அலுவலர்களால் பட்டுப் புழு வளர்ப்பு பற்றிய பயிற்சியும், இந்த ஊசிப் புழுக்களை எப்படித் தடுப்பது என்பது பற்றிய பயிற்சியும் அளிக்கப்பட்டு இந்தப் பூச்சிகளை அழிப்பதற்காக மருந்து தெளித்தல் போன்ற செயல்முறை விளக்கங்களும் செய்து காண்பிக்கப்படுகின்றன.

திரு. கே. ரமணி ; தலைவரவர்களே, கோர்மாளம் அந்த இடத்திலிருந்து சில மைல்கள் தூரத்தில் இருக்கின்றது. நான் சொல்லக்கூடிய இந்த இடங்களெல்லாம் குத்தியாலத்தூர் பஞ்சாயத்து, இன்னும் குன்றி, மற்றப் பகுதிகளில் இருக்கும்படியான பஞ்சாயத்துக்களுக்கு உட்பட்ட கிராமங்களிலேயே இருக்கின்றன, அந்தப் பகுதிகளுக்கும் இந்தப் பகுதிகளுக்கும் போதுமான ரோடு வசதிகூட இல்லை. மக்கள் போக்குவரத்துக்கே கஷ்டம். ஆகவே, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு, அந்தக் குத்தியாலத்தூர் பஞ்சாயத்தை மையமாக வைத்து ஒரு பயிற்சி நிலையத்தை, இந்தப் பூச்சி வளர்க்கின்ற நிலையத்தை உருவாக்கி அவர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோர்மாளத்திலே உள்ள அரசு பட்டு வளர்ப்பு பண்ணையில் இருக்கக்கூடிய தொழில் நுட்ப அலுவலர்கள் பட்டு வளர்ப்புப் பகுதி அனைத்துக்கும் சென்று, அங்கிருக்கக்கூடிய விவசாயிகளைச் சந்தித்து, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற அவர்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளைப் போக்கு கின்ற வகையிலே நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள், அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு பகுதியிலே இருந்தும் குறிப்பிட்ட சில விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, (குறிப்பாக 41 விவாயிகள்) அந்தப் பகுதியில், பல்வேறு பகுதிகளிலேயிருந்து தேர்ந்தெடுத்து புழு வளர்ப்பு, பூச்சி மருந்து தெளிப்பு போன்ற பயிற்சிகள் ஒரு மாதம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அந்த ஒரு மாதம் பயிற்சியின் போது அவர்களுக்கு மானியமாக 150 ரூபாய் தரப் படுகிறது. பயிற்சி முடிந்து வெளியேறுகிற அந்த விவசாயிகளுக்கு 150 ரூபாய் மதிப்புள்ள புழு வளர்ப்பு சாதனங்கள் மற்றும் மற்ற கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு பகுதியாக விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, இப்படி ஒவ்வொரு மாத பயிற்சி மானியத்தோடு அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளுக்கு இந்தத் துறையின் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

(9-55 மணி)

லாரி மூலம் குடிதண்ணீர்.

*3031 திரு. பெ. ஆசையன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆண்டிப்பட்டி பேரூர் பொதுமக்களுக்கு லாரி மூலமாக குடிதண்ணீர் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

ஆண்டிப்பட்டி பேரூராட்சி மக்களுக்கு தற்போது போதுமான அளவில் குடிநீர் கிடைப்பதால் லாரிமூலம் குடிநீர் வழங்க அவசியம் எழவில்லை.

மதுரையில் செவிலியர் கல்லூரி.

* 5207 திரு. இரா. சாமிநாதன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் அமைச்சர் துறை கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையில் செவிலியர் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப் படும்?